**O.S.No.178/2016**

**Date:18.09.2018**

வாதி தரப்பு சாட்சி 1 – மந்தக்காளை, த–பெ.அழகப்பக்கோனார்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவாச் சொத்துக்கள் எனக்கு பாத்தியம் என்பதற்காக விளம்புகை மற்றும உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1981ல் நான் மைனராக இருக்கும் போது, என் தகப்பனார் என் பெயரில் சொத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் இரண்டு பேருக்கும் வாங்கியுள்ளார். அய்யாவு பெயரிலும் சொத்துக்கள் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் பெயரில் வாங்கிய சொத்துக்கள் எனக்குத்தான் பாத்தியம் என்றால் சரிதான். அய்யாவு பெயரில் வாங்கிய சொத்துக்கள் அய்யாவுக்குத்தான் என்றால் இல்லை, கூட்டாக பாத்தியப்பட்டுள்ளது. என் பெயரில் வாங்கிய சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. மற்றொரு வழக்கில் ஆஜரான நாகரெத்தினம் என்பவர் என் சகோதரி என்றால் சரிதான். எங்களில் என் சகோதரிக்குத்தான் முதலில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். என் சகோதரியை கோபால் என்பவருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான என் அண்ணனுக்கு எப்போது திருமணமானது என்றால் 1982 அல்லது 1983ல் திருமணமானது. அவ்வாறு திருமணம் நடைபெறும் போது என் தகப்பனார் உயிரோடு இருந்தாரா என்றால் உயிரோடு இருந்தார். என் தகப்பனாருக்கு முன்பே என் தாயார் காலமாகிவிட்டார் என்றால் சரிதான், நான் பிறந்து ஒரு வருடத்திற்குள்ளாக இறந்து விட்டார். பொதுவாக கிராமத்தில் கூட்டுக்குடும்பத்தில் ஆண் மக்களுக்கு திருமணமாகி விட்டால் அவருக்கு சொத்து ஒதுக்கி தனிக்குடித்தனம் சென்று விடுவார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு திருமணமான போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் தெரியாது. அய்யாவும் என்னைப் போல் படிக்காதவர் என்றால் சரிதான். இரண்டு பேரும் விவசாய வேலை பார்ப்போம் என்றால் சரிதான். என் அப்பாவும் மைனராக இருந்த என்னை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவரும் விவசாய வேலை செய்வார் என்றால் சரிதான். என் தகப்பனார், 1ம் பிரதிவாதிக்கு திருமணம்

செய்து வைத்த பின்னர்தான் அய்யாவு பெயரில் சில சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் 18, 19ம் எண் உள்ள பட்டாவில் அய்யாவு பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் 18, 19 எண் உள்ள பட்டாவிற்கு எந்த காலத்திலும் கிஸ்தி செலுத்தியது கிடையாது என்றால் சரியல்ல, செலுத்தியுள்ளேன். தற்போது நான் இதே சொத்துக்களுக்காக அசல் வழக்கு எண்.411-2013ஐ மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். தாவாச்சொத்தில் ஏ செட்யூலில் 1 முதல் 5, பி செட்யூலில் 1, 7, 8, 9 சொத்துக்கள் அனைத்தும் என் அண்ணன் அய்யாவு அவர்களின் சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்றால் மீனாட்சிபுரம் கிராமத்தில் உள்ளது. என் வழக்குரையில் சொத்துக்கள் மீனாட்சிபுரம் கிராமத்தில் உள்ளதாக சொல்லப்படவில்லை என்றால் தெரியாது. இந்த செட்யூலில் எந்த ஊரில், எந்த சொத்துக்கள், என்ன நான்குமால் உள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் தெரியாது. சர்வே எண்.93-3ன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எந்த சொத்துக்கும் விஸ்திரணம் தெரியாது. சொத்துக்கள் வாங்கப்பட்ட விபரம் வழக்கிற்காக நான் அய்யாவுவின் பெயரில் வாங்கப்பட்ட பொதுச்சொத்துக்கள் என்று பொய்யாக வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்கள் பட்டா எண்.318ல் தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.318 நாளது தேதியில் நான் என் சகோதரர், சகோதரி ஆகியோர் பெயர்களில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.18, 19 அய்யாவு பெயரில் தனிப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். என் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கு என் பெயரில் தனிப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். நாளது தேதி வரை என் பெயரில் உள்ள பட்டாவுக்கு அய்யாவு கிஸ்தி செலுத்தவில்லை என்றாலும், அந்த சொத்துக்களில் அவர் பாத்தியம் கோரவில்லை என்றாலும் சரிதான். சமீபத்தில் அய்யாவுவின் மனைவி வழி உறவுகளில் சில கசப்பான விரோத நடவடிக்கைகள் எங்கள் இரண்டு குடும்பத்திற்கும் இடையே ஏற்பட்டதால் இரண்டு குடும்பங்களுக்கும் இடையே விரோதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 1991ல் பாகம் நடந்து கொண்டுள்ளதாக தெரிவித்து, தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணம் உண்மையான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. பாகம் செய்து கொண்டதாக உள்ளதில் என் சகோதரி இருந்தாரா என்றால் இருந்தார். அவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டதா என்றால் ஒதுக்கப்பட்டுள்ளது. பத்திரங்களில் என் சகோதரியிடம் கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை. என் சகோதரி ஏன் கையெழுத்துச் செய்யவில்லை என்றால் அவர் வரவில்லை. பாகமானது என் சகோதரி முன்னிலையில்

ஏற்பட்டதா அல்லது அவரது கணவர் முன்னிலையில் ஏற்பட்டதா என்றால் என் சகோதரி மற்றும் அவரது கணவரும் உடன் இருந்தனர். என் சகோதரி, அவரது கணவர் அனைவரும் இருந்து வா.சா.ஆ.3 ஆவணத்தை ஏற்படுத்தியதாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் அவர்கள் வா.சா.ஆ.3ல் கையெழுத்துச் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் கண்ட ஷரத்துக்களின்படி நாங்கள் பின்னாளில் பத்திரம் எழுதிக் கொண்டோமா என்றால் இல்லை. பட்டா மாறுதலுக்கு வட்டாட்சியரிடம் மனுக் கொடுத்துள்ளதற்கு என் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் மாற்றப்பட்டது. பட்டா மாற்றம் செய்ய மனுக் கொடுத்தேன். அந்தமனுவின் பேரில் வட்டாட்சியர் விசாரணை செய்தாரா என்றால் இல்லை. நான் கொடுத்த வா.சா.ஆ.10 மனுவானது நான் கொடுக்கவேயில்லை என்றாலும், எனவேதான் வட்டாட்சியர் விசாரணை செய்யவில்லை என்றாலும், கீழ்மட்ட அதிகாரிகளின் உதவியோடு மோசடியாக பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்டபடி 318ம் எண்உள்ள பட்டா என் தகப்பனார் பெயரில் உள்ளதால், அந்த சொத்துக்களில்தான் அனைவருக்கும் பாகம் உள்ளது என்றாலும், அது சம்பந்தமாக அய்யாவு தாக்கல் செய்த வழக்கு எண்.447-2013 தற்போது நிலுவையில் உள்ளது என்றாலும், அந்த வழக்கிற்கு விரோதமாகத்தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டதற்கான காரணம் அவரவர் பெயரில் உள்ள சொத்துக்கள் அவரவர் அனுபவித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்ததால்தான் மேற்படி வழக்கு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களை மட்டும் பாகம் செய்து கொள்ள வேண்டும் என்பதால்தான் அந்த வழக்கை வாபஸ்பெற்றுக் கொண்டோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கும் செல்லத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்த பின்னர்தான் எனக்கு திருமணமானது என்றால் எனக்கு 1991ல் திருமணமானது. அந்த திருமணத்தை என் அக்காதான் நடத்தி வைத்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்த பின்னர் என் சகோதராரியின் அரவணைப்பில்தான் வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. என் சகோதரிதான் என்னை பராமரித்து வந்துள்ளார் என்றாலும், தற்போது குடும்பத்தில் பிரச்சனை வந்ததால், என்னை துண்டி விட்டு என் சகோதரி இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றாலும், வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.